பன்றிகள் கேட்பார் இல்லாமல் வளர்க்கப்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு அரசு ஆக்கப் பூர்வமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அந்தக் குழந்தைகளின் மூளைக் காய்ச்சல் சம்பந்தமாக ஒரு ஆய்வு நடத்துவதற்கு ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த அரசிடம் ஆக்கப் பூர்வமான திட்டம் ஏதேனும் உண்டா என அறிய விரும்புகிறேன்.

10-15 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து, ஆராய்ச்சிகள் எதுவும் நடத்துவதற்கான எந்த குறிப்புகளும் இல்லை. அதைத் தடுப்பதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு எடுக்கும் என்பதை மீண்டும் நான் வலியுறுத்திக் கூறிக் கொள் கிறேன்.

திரு. ஜி, பொன்னுபிள்ளை; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே, 12–3–90 முதல் 21–3–90 வரை அந்த இடைக்காலத்தில் ஐந்து குழந்தைகள் இறந்து விட்டதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்கு அடுத் தாற்போல், கோட்டைப்பட்டியிலே, அதற்குப் பக்கத்திலே உள்ள அடைக்கப்பட்டி கிராமங்களிலே 4 இறப்புகளில் 3 இறப்புகள் டி. பி. எனவும் தேனி ஜவகர் நகர் பகுதியில் நிகழ்ந்துள்ள ஒரு இறப்பும் டி. பி. சம்பந்தப்பட்டது என்றும் குறிப்பிட்டிருக் கிறார்கள். அறிக்கையில் கண்ட 5 இறப்புக்களில் நான்கிற்குத் தான் கணக்கு சொல்லியிருக்கிறார்கள். மீதமுள்ள ஒரு இறப்பு எந்த வகையிலே நடைபெற்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி; பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த விவரம் இல்லை இது இந்த வகை மூளைக் காய்ச்சல் வியாதியிலே வரவில்லை.

(ஆ) மேட்டூர் மில் மூடப்பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

திரு. எம். சீரங்கன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் மில் கடந்த நான்கு ஆண்டுகளாக மூடிக் கிடப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலுள்ள மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்டிரீஸ் லிமிடெட் என்னும் நூற்பாலை மற்றும் நெசவாலையில் சுமார் 2500 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். இந்த ஆலை 1-1-1983 முதல் குக்மனி மில்ஸ் நிறுவனத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்டு நடத்தப்பட்டு வந்தது. இந்த ஆலையில் ஐ.என்.டி.யூ.சி., ஏ.ஐ.டி.யூ.சி., தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை. அண்ணா தொழிற்சங்கப் பேரவை, எச்.எம்.எஸ்., என்.எல்.ஓ., சி.ஐ.டி.யூ., போன்ற சங்கங்களும் இதர தனிப்பட்ட சங்கங்களும் இயங்கி வந்தன. அந்த ஆலையில் 654 தறிகளும், 67 பிரேம்களும், 29,688 கதிர்களும் உள்ளன. மார்ச் 1983 முதல் ஆலையிலுள்ள அனைத்து இயந்திரங்களும் சரியாக உபயோகிக்கப்படாமல் முழுமையாக இயங்கவில்லை. இதனால் தொழிலாளர்களுக்கு பெருமளவில் லே-ஆப் அளிக்கப்பட்டது. இதுபற்றி தொழிற்சங்கங்கள் செய்த முறையீடுகளை அடுத்து, தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்பு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதன் பயனாக 11-10-1984 இல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு அதன்பிறகு ஜனவரி 1985 இல் ஆலை ஓரளவிற்கு இயங்கத் தொடங்கியது. 1985 ஜூலை மாதத்தில் தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு போன்ற பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி 15-7-1985 முதல் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டபோது, அதில் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ரீஸ் லிமிடெட் நிறுவனத் தொழிலாளர்களும் கலந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்து நிர்வாகம் ஆலையை 16-7-85 முதல் கதவடைப்புச் செய்தது. ஆனால் இந்தப் பொது வேலை நிறுத்தம் அனைத்துத் தொழிலாளர்களால் 25-7-1985 முதல் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகும், மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இன்டஸ்டிரீஸ் நிர்வாகம் கதவடைப்பை ரத்துச் செய்யாமல் நீட்டிப்பு செய்தது. ஆகவே, கதவடைப்பை ரத்துச் செய்தல், ஆலையின் ஸ்திரத் தன்மை, உற்பத்தி, வேலை அளவு நிர்ணயம், ஈட்டிய சம்பளம் போன்ற பல பிரச்சினைகள் எழுப்பப்பட்டு, தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன்பு பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்றைய அரசு பொறுப்பிற்கு வந்தபின் மூடப்பட்ட பஞ்சாலைகள் ஆறு பஞ்சாலைகளை அரசு ஏற்று நடத்துவதாக அறிவித்துள்ளது. அதில் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்டிரீஸ் ஆலையும் அடங்கும். அரசின் இந்தச் செயற்குறிப்பு மத்திய அரசிற்கு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது, மத்திய அரசின் அனுமதி பெற்றவுடன் மேல் நடவடிக்கை தொடரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சீரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியது போன்று, அந்தத் தொழிற்சாலையில் 3,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். அலெக்சாண்டர் மில்ஸ் என்று அதனுடைய

இணைத் தொழிற்சாலை ஒன்று இருக்கின்றது. 1985ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழ்நாடு பூராவும் நடைபெற்ற அந்தப் பொது வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டார்கள் என்பதற்காக சட்டவிரோதமாக எந்தவித அறிவிப்பும் இல்லாமல் கதவடைப்பு செய்து விட்டார்கள். இந்தத் தொழிற்சாலையை பிரிட்டிஷ் முதலாளி நடத்திக் கொண்டிருந்த காலத்தில் 1983-ல் இந்த நிர்வாகம் $3\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு தொழிற்சாலையை வாங்கினார்கள். அந்த $3\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு வாங்கிய அந்தத்தொழிற்சாலை 7 கோடி ரூபாயை அரசு பொது நிறுவனங்களிடமிருந்து, வங்கிகளிடமிருந்தும் கடன் பெற்றும், தொழிலாளர்களுடைய பொது வைப்புநிதி பிராவிடைண்ட் ஃபண்டு 47 லட்சம் ரூபாயையும், தொழிலாளர்களுடைய இன்ஷூரன்ஸ் பணம் 30 லட்சம் ரூபாயையும் கட்டாமல் இன்று வரை இருந்து கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இறந்து விட்டார்கள். தொழிற்சாலைகளை திறப்பதாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோவையில் அறிவித்த பின்பும் இன்று வரை நடவடிக்கை இல்லாமல் காலம் கடந்து வருகிறது விரைவில் அந்தத் தொழிற்சாலைகளை எடுத்து நடத்துவதற்கு அரசு தீவிரமான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சம்மந்தப்பட்ட நிர்வாகம் ருக்மணி மில் முதலாளி பழனியப்ப செட்டியார் மீது அரசினுடைய பணத்தை தவறான வழியில் பயன்படுத்தியதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

10-20 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6 மில்களுடைய நிர்வாகப் பொறுப்பை அரசு ஏற்கும் என்று அறிவித்த பிறகு இந்த 6 மில்களுடைய நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ள மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட போது 4 மில்களை B.I.F.R. என்ற நிறுவனத்திடம் எங்களுடைய தொழிற்சாலை மிகவும் பாழடைந்து இருக்கிறது, அதை சீர்செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு B.I.F.R.க்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இரண்டு மில்களை Nodel Agencies என்ற அளவில் இன்றைக்கு மத்தியஅரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. Nodel Agencies என்பது ரிசர்வ் வங்கி கவர்னர் அவர்களும் அதேபோல் மத்திய அரசின் டெக்ஸ்டைல் செக்ரட்டரி அவர்களும், பிரதிநிதியும் ஆகிய 3 பேரும் சேர்ந்து இந்தத் தொழிற்சாலையை எந்த வகையில் மாற்றி அமைத்தால் நல்லபடியாக ஓடும் என்பதை ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள், மேட்டூரைப் பொறுத்தவரையில் B.I.F.R. யில் தான் இதை பார்வையிட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய டெக்ஸ்டைல் செகரட்டரி மத்திய அரசோடு அடிக்கடி தொடர்பு கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எவ்வளவு விரைவாக அதை திறக்க முடியுமோ அவ்வளவு விரைவாக திறக்க வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். வெகு விரைவாக மத்திய அரசின் ஒப்புதலைப் பெற்று விரைவாக திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சிரங்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொழிற்சாலையில் தற்சமயம் ஒரு பகுதி மட்டும் ஸ்பின்னிங் பகுதி மட்டும் இயங்குகிறது. மீதி பகுதி இப்போது இயங்கவில்லை என்று சென்ற வாரத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அறிவிக்கப்பட்டதாக அறிகிறேன். அந்த நிலையை மாற்றி அந்தத் தொழிற்சாலையை லாபகரமாக நடத்துவதற்கு மீதி பகுதியையும் இணைத்து வைத்தால் அங்கே பிளிச்சிங் செக்ஷன், டையிங் செக்ஷன் இருக்கிறது. சாயப் பட்டறை இருக்கிறது. இது ஒரு மேஜரான தொழிற்சாலை, அதன் மூலம் இருக்கும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க தமிழகத்தில் ஒரு முதல்தரமான தொழிற்சாலையாக நடத்த முடியும். அத்தகைய நிலையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத்தொழிற்சாலையை முழுமையாக இணைத்து இயங்க வைத்து விரைவாக தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேட்டூர் மில் மட்டும் அல்ல. 6 மில்களையும் விரைவாக திறப்பதற்கு இந்த அரசு முழு முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

4 விதி 111-ன் கீழ் முதலமைச்சரின் அறிக்கை

திரிசூலம் பகுதியில் கல்குவாரி எடுக்கப்படுவது பற்றி உறுப்பினர் திரு. குமரி அனந்தன் தெரிவித்துள்ளது குறித்து விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டமன்றப் பேரவை விதி 111–கீழ் இப்பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையினைப் படைப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 28-3-90 அன்று நிதிநிலை அறிக்கையின் பொது விவாதத்தில் இங்கே உரையாற்றிய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் குமரிஅனந்தன் திரிசூலத்திலே கல்குவாரியிலே தவறு நடைபெற்றதாக குறிப்பிட்டபோது அதுகுறித்து விசாரித்து இந்த அவையில் விளக்கம் தருவதாகக் கூறி இருந்தேன். அது பற்றிய விவரம் வருமாறு:

திரிசூலத்தில் உள்ள புல எண். 85/1ல் 37.07 ஏக்கர் நிலப் பரப்பு உள்ள கல்குவாரி அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ளது. சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம் 2 கல்குவாரிகளை 26.4.1981 முதல் 10 ஆண்டுகளுக்கு தனது கல் தேவைகளுக்காக குத்தகைக்கு எடுத்து இருந்தது. தனது கற்கள் தேவை முடிவுற்றதும் 25.4.86 அன்று இந்தக் கல் குவாரிகளை மீண்டும் அரசிடம் ஒப்படைத்தது. இந்தக் கல்குவாரிகளை செங்கை-அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் 30.6.1986ல் இருந்து அரசுப் பொறுப்பில் ஏற்றுக் கொண்டார்.